தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 மீனம் (ஏப்ரல்—1—15) விலை உருபா 1·50 (இதழ் எண்: 154

இந்தியப் படைத்துறையிலும் இந்துமதப் பரப்புதல் ஏற்பாடு!

பார்ப்பனீய அட்டூழியத்திற்கும் அதிகாரத்திற்கும் அளவில்லையா!

பிற மதங்களுக்கும் இடமளிப்பதுபோல் நடித்து, இந்து மதத்தையே முழுமையாகப் பரப்புகிறது பார்ப்பனீய அரசு!

மக்கள் திரண்டெழுந்து எதிர்க்காவிடில் எதிர்காலத்தில் பார்ப்பனீயக் கருத்துகள் தவிர, வேறெதற்கும் இடமிராது!

ஏற்கனவே, அரசின் அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனியத்தின் இந்து மத வெறிச் செயல்கள் கால்களை அகல விரித்துக் கொண்டுள்ளன. கல்வித் துறை, கலை, பண்பாட்டுத் துறைகள், ஒலி, ஒளி பரப்புத் துறைகள், பொழுது போக்கு, விளையாட்டுத் துறை முதலிய பெரும்பாலான துறைகள் இந்து மதத்திற்குச் சார்பாகவே இயங்குமாறு, கரவாகத் திட்டமிடப் பெறுகின்றன. இவ்வனைத்துத் துறைகளிலும் ஒலி, ஒளி பரப்புத் துறைகளிலேயேயும் பார்ப்பனீயம் கொடிகட்டிப் பறக்கிறது. வானொலியையும் தொலைக்காட்சியையும் கேட்கவோ பார்க்கவோ

முடிவதில்லை. அவ்வளவு கொடுமைகள்! பேச்சு, நடை, உடை, பாவனை, காட்சி, கருமங்கள் அனைத்திலும் பார்ப்பனியம்! பார்ப்பனியம்!! கண்களும் காதுகளும் புண்ணுகின்றன! ஒலி, ஒளிப் பெட்டிகளைச் சுக்கு நூறாக உடைத்து நொறுக்கி விடலாமா என்று கடுஞ்சினம் வருகையில், அவை நம்முடையன என்ற நினைவும் கூடவே வந்து, அந்தக் கடுஞ்சினத்தைத் தணிவித்து விடுகிறது. அத்தனை அழிம்புகள்! அதிமட்டங்கள்! கேட்பார் கேள்விக்கு யாருமே இல்லை என்னும் அகங்காரம்! மமதை! உன்மத்தம்!

இந்த நிலையில் இப்பொழுது இன்னொரு கொடுமையான செய்தி வந்திருக்கிறது.

படைத்துறையில் உள்ள வீரர்களிடம் மதக் கருத்துகளைப்—பரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. (மதம் என்று பொதுவாகச் சொன்னாலும்—வேறு மதங்களுக்கும் அங்கு இடமுண்டு என்று அறிவித்தாலும்—அவர்களின் முழு நோக்கமும் இந்து மதத்தைப் பற்றியதுதான் என்பதில் ஐயமில்லை—)

படைத் துறையில் இஃது ஒரு புதிய ஏற்பாடு, புதிய பதவி. அதன் பெயர் இளநிலை ஆணைய அதிகாரி—மத ஆசிரியர் (Junior Commissioned Officer—Religions Teacher) என்பது.

இவர்களும் படைத்துறை அதிகாரிகள் என்னும் மதிப்பைப் பெறுவார்கள்.

அவர்களின் பணிகள் படைத்துறை வீரர்களிடம் மத உணர்வுகளைப் புகட்டுவது; மதக் கோட்பாடுகளைக் கற்பிப்பது, மதப் பழக்க வழக்கங்களைப் புகுத்துவது.

இவர்கள் மதப் பரப்புநர்கள்—மத ஆசிரியர்கள். இவர்கள் மதக் கருத்துகளைப் படையினர்க்கு அறிவுறுத்த வேண்டும்; மத வழிபாடுகளை அவர்களுக்குச் சொல்லித் தருதல் வேண்டும்; வழிபாட்டுக் கூடங்களில் சமயச் சடங்குகளை நிகழ்த்த வேண்டும்; படையில்—போர்க்களத்தில்—இறந்தோர்க்கு இறுதிச் சடங்குகளை நிகழ்த்த வேண்டும். அங்குள்ள மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளின் நலங்களுக்கென—நோய்கள் நீங்குவதற்கென வேண்டுகை வழிபாடு செய்யவேண்டும்; சிறையிலுள்ள வீரர்களைச் சந்தித்து அவர்களுக்கும் படையினர் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கும், படைத்துறையில் சேர்த்துக் கொள்ளப் பெற்ற சிறுவர்களுக்கும் (Boys Regiment) சிறப்பு மதக் கருத்துகளைப் பயிற்றுவிக்க வேண்டும்; அத்துடன் இவர்கள் அதிகாரிகள், வீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு மதக் கருத்துகளையும் சடங்கு, பழக்க வழக்கங்(சம்பிரதாயங்)களையும் பயிற்றுவித்து, அவர்களுடைய நல்வாழ்விற்காகத் தொண்டாற்றுதல் வேண்டும் —என்பனவாக அவர்களுக்குப் பணி நிலைகள் வகுக்கப் பெற்றிருக்கின்றன.

இம் மதப் பயிற்று அதிகாரிகளுக்கான சம்பளம் 1300—40—2100 ஆகும். இத்துடன் அகவிலைப்படி, கூடுதல் அகவிலைப்படி, இலவய இருப்பிடம், இலவய உணவு, சீருடை, அவருக்கும் அவர் குடும்பத்தவர்க்கும், அவரைச் சார்ந்துள்ளோர்க்கும் இலவய மருத்துவ வசதி, மற்றும் விடுப்பு, பயணச் சலுகை, பிற உண்டிச்சாலை வசதிகள், பிற படைத்துறை அதிகாரிகளுக்கு அளிக்கப் பெறும் கூடுதல் படிகள் அனைத்தும் இவர்களுக்கும் உண்டாம். பணிக் காலத்திற்குப் பின் ஓய்வூதியமும் பிற சலுகைகளும் உண்டு.

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? இந்த மதப் பயிற்றுவிப்பார் பணியில் இந்துமதம், கிறித்துவ மதம், இசுலாம் மதம், சீக்கிய மதம் முதலிய அனைத்து மதப் பயிற்றாசிரியர்களும் எடுக்கப் பெறுவதாக அறிவிப்பு வந்தாலும், பெரும் பகுதி இந்துமதவாசிரியர்கள் தாம் எடுக்கப் பெறுவர் என்பது எல்லாரும் அறிந்ததே! பிற மதங்களில் பெயருக்குச் சில பேர்கள் எடுக்கப் பெற்றாலும் அவர்களுடைய செயற்பாடுகள் மிகுதியாக இருக்கும்படி விட்டு விடமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இதில் இன்னொன்றும் உண்டு. இப்பதவிக்கு வருபவர்கள் சமசுக்கிருதம் அல்லது இந்தியில் அல்லது வட்டார மொழியில் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று அறிவிப்பு கூறுகிறது. ஆனால் பணிவாய்ப்பு சமசுக்கிருதம், இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் மிகுதியாக இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இவ்வாறு, இந்தியாவில், இதுவரையில் இல்லாதபடி, இந்தியப் படைத்துறையிலும் இந்து மதப் பரப்புதல்—வல்லாளுமை—புகுந்து விட்டது. இதற்குக் காரணம் படைத்துறையில் உள்ள மேனிலை அதிகாரிகள், கீழ்நிலை அதிகாரிகள் ஆகியோரில் ஏதோ ஓரிருவரைத் தவிர, மிகப் பெரும்பாலோர் பார்ப்பனர்களே!

அவர்கள் ஏற்கனவே வானூர்தி, கப்பல் முதலியவற்றை வெள்ளோட்டம் விடும்பொழுது அவர்களின் படைத்துறை நடவடிக்கைகளில் (Regulations) இல்லை என்றாலும், தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றிப் பூசை செய்து படைத்து வரும் வகையிலும் பிற வாய்ப்புள்ள இடங்களிலும் மதச் சடங்குகளைக் கடைப் பிடித்து வருகிறார்கள். இவர்களைப் போன்றவர்களுக்கு இப்புது மதப் பரப்புதல் நடவடிக்கை இன்னும் மத வெறியை வளர்ப்பதற்கு உதவும் இனி நின்று கொண்டு பேய்ந்தவன்கள் ஓடிக் கொண்டே பெய்வான்கள். பார்ப்பனிய அட்டூழியத்திற்கும் அதிகாரத்திற்கும் அளவே இல்லையா?

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

நிறுவனர். பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தலைமையகம்: பறம்பை அறிவன், பொதுச் செயலாளர், பறம்புக்குடி. 623 707. முகவை மாவட்டம், தமிழகம்.

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்!

1. அமர்த்த அறிவிப்புகள்: 4. (23-3-1992)

3. துணைச் செயலாளர் — தலைமையகம்.

O *பண்பாட்டுப் பரிமாற்றச் செயலகம்.*

திரு. வை. கண்ணையன்,
மல்லிகை இல்லம்.
நெசவுப் பட்டறைத் தெரு,
மதுரைச் சாலை, அருப்புக்கோட்டை-
காமராசர் மாவட்டம்.

சார்பு அமைப்பு: 1
'தமிழ்ப் பண்பாட்டு மன்றம்,'
நெறியாளர்: திரு. புலவர் — பசும்பொற்கிழார்,
பாளையம்பட்டி. 626 112.
காமராசர் மாவட்டம்.

சார்பு அமைப்பு: 1
துறைதோறும் தமிழ்ச் சொல் தெரிவுக்குழு
நெறியாளர்: திரு. இரா. பழனிச்சாமி
3/867, பாரதி நகர்,
பறம்புக்குடி. 623 707.

தூய தமிழ் ஆய்வியக்கச் செயலகம்.
உ.த.மு.க. தலைமையகம் — துணைச் செயலாளர்
— ஆய்வில் —

பொருளாளர் (தலைமையகம்) — செயல் தாழ்வு காரணமாக — விரைந்து செயல்படும் நோக்கிற்காக, அனைத்துப் பணவிடை — பொருள் கொடைகளைப் பொதுச் செயலாளர் முகவரிக்கே விடுத்துதவுக.

பறம்பை அறிவன், பொதுச் செயலாளர்.

2. பொதுச் செயலாளர்க்கு வந்த மடல்களுக்கு ஆன மறுமொழிகள்!

1. "...வேலையைத் தொடங்க அல்லது நிறுத்த உங்கள் விடை வேண்டும்" 'கலை, இலக்கிய வளர்ச்சி இயக்கம்' உ.த.மு.க.வில் ஒரு துடிப்பை எதிர்பார்க்கிறது. குழந்தை பிறந்ததும், அது தன் கொப்பூழ்க்கொடியைப் பிடித்து நடந்து விட வேண்டும் என்று தாய் நினைக்கிறாளே! அது தான் வியப்பு. 'தம்பி — தங்கை'ப் பாப்பாவைக் கையைப் பிடித்து நட' என்று இழுக்கின்ற 'சிறுவர் செயல்,' ஆசையாக மட்டுமே முடிந்து விடும்!

O அவர் ஆசையை, விடு — அது தவறு என்றால் விடவா போகின்றார்! ஆனால், தாய் குழந்தையின் அடுத்த அடுத்த கட்ட வளர்ச்சியிலேயே அக்கறை காட்டுவாள். அத்தகைய அக்கறை கொண்ட திரு. அதியமான், கலை இலக்கிய வளர்ச்சி பற்றிய நிலைமைக்கேற்பத் திட்டமிடுவதில் அக்கறை காட்டுவார் என நம்புகிறேன்.

O வேலை, நம் வேலை. இதில் தொடக்கம் உண்டேயன்றி, 'நிறுத்தம்' இல்லை. அப்படி ஒரு 'நிறுத்தம்' உண்டெனில், அடுத்த தொடக்கமே உண்டு! அமைப்பு ஒருவர் இருவரானால் கூடும். அத்தகைய இணைப்பை வளர்க்க இசைவான கொள்கையாளரை உருவாக்கிட முயல்வோம். அவர்கள் கலை, இலக்கியத்தை உருவாக்குவதில் முன் நிற்பார்கள். அவர்களை நாம் தொடர்கின்ற போது நிறுத்தி விடுதல் முடியாது.

2. தமிழின உணர்வு — உ.த.மு.க. கொள்கை ஏழின் மீதும் உடன்பாடு கொண்டவர்களை இணைத்துச் செயல் படலாம். அவர், தி.மு.க, அ.இ.அ.தி.மு.க. இ.பொ.க... இப்படி எவராயினும் 'தமிழர்' எனத் தம்மை உணர்ந்து கொண்டாராயின் உ.த.மு.க.வில் செயல் படலாம்.

3. உ.த.மு.க. அமைப்பில் சேர்வதும், அதில் இயங்குவதும், ஒருவர்க்கு அதன் கொள்கைகள் மீதுள்ள பிடிப்பின் அளவால் அமையும். தனியன்புகள், தொடர்புகள் இயக்கத்தில் ஈடுபடாத போதும் தொடர்வதற்கு உரியனவே. ஆயினும், இயக்க நிலையில் நாம் விலகி நின்றாலும் இயங்கியல்படி ஒன்றிணையும் காலம் வரும்.

3. தமிழினத்திற்கு ஒரு திறந்த மடல்...!

உ.த.மு.க. பொ.செ ம.எண் 59/92 12-3-1992.

தமிழினமே வாழ்க! உலக முதலினமே, உன் கவனத்திற்குச் சில செய்திகள், சிந்தனை செய்க; செயல்படுக! "யாதும் ஊரே; யாவரும் கேளிர்." நம்மினத்தின், உயர்ந்த நோக்கம். இதனை எய்தத் தமிழினம் அனைத்துத் துறைகளில் முன்னேறுதல் வேண்டும். தமிழினம், பல துறைகளிலும் தேர்ச்சியும் தெளிவும் பெற்று விடுதலையுணர்வும், உரிமை நிலையும் பெற்றாதல் வேண்டும். இந்த

Scanned with CamScanner

நிலை உருவாக, அனைத்து நிலைகளிலும் முன்னேறல் வேண்டும்.

உ.த.மு.க. ஒரு பண்பாட்டியக்கம்; உண்மை உழைப்பியக்கம்! இது துறவு மனப் பண்புடன், அறவழியில் 'தமிழின ஒருமை' உணர்வுண்டாகப் பாடுபடும். எந்தக் கட்சிக்கும் அரசுக்கும் தலையாகவோ, வாலாகவோ செயல்படாது. தமிழின மக்களின் மேன்மை ஒன்றினையே கருதிச் செயல் படும்.

இந்திய அரசின் ஆட்சியதிகாரத்தில் தமிழர்கள் முன்னேற்றம், உலக அரங்கில் தமிழர் வாழும், அந்தந்த அரசியலதிகாரச் சட்ட நெறிக்குட்பட்டுத் தமிழர்கள் முன்னேற்றம்; உலக அறநெறி—அனைத்துலகச் சட்ட வழிமுறை—இவற்றிற்கும் மேலாகத் திருக்குறள் மெய்ம்ம நெறியில் எய்திட முயலும்.

அன்புடன்,
பறம்பை அறிவன்
பொதுச் செயலாளர்.

உ.த.மு.க.
பறம்புக்குடி-623 707.

4.

உ.த.மு.க. இணைப்பொதுச் செயலாளரின் ஒரு மடல்!

பேரன்புடையீர், வணக்கம்.

மொழிப்புலம் இழந்த பிறவிக் குருடர்களாகிய தமிழர்களுக்கு வழித்தடங் காட்டியும், இழந்த உரிமைகளை மீட்பதற்கு, இரவென்றும் பகலென்றும், மழையென்றும் பாராது இயங்கிக் கொண்டுள்ள ஒரு பெரும் பேராற்றலாகவே தங்களை நாங்கள் கருதுகின்றோம்.

தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில், இனத்திற்குள் இருக்கின்ற பல்வேறு முரண்பாடுகளை விளக்கப்படுத்தி முதன்மை முரண்பாட்டை நோக்கி நம் மக்களைத் திருப்ப வேண்டும். ஒவ்வொரு சாதிக் குழுவும், ஒவ்வொரு தொழிற் பிரிவும் மற்ற பிரிவு மக்களை அழுத்திக் கொண்டிருப்பதால், பொது எதிரியைப் பற்றிச் சிந்திக்க முடியாத நிலையிலேயே தமிழினத்தின் அடித்தள மக்கள் இருக்கின்றனர். நாம் இவற்றைக் கணக்கில் கொள்ளாமல் வெறும் தமிழின முன்னேற்றம், தமிழின விடுதலை என்று எழுதிக் கொண்டிருப்பதும், உரையாற்றிக் கொண்டிருப்பதும் இன்றைய நெருக்கடியான சூழலில் வீணாகவே போய்விடும் என்றும் எண்ணுகிறேன்,

ஆகவே தமிழினத்திலுள்ள பல்வேறு முரண்பாடுகளை விளக்கப்படுத்தியும் மக்களை தமிழ்த் தேசிய இன உணர்வில் இணையச் செய்வதற்குமான கருத்தியல் அடிப்படையில் சில கட்டுரைகளை அனுப்பியுள்ளேன். தமிழ்த்தேசிய முன்னேற்றத்தையும் விடுதலையையும் நடுவமாகக் கொண்டு, பல்வேறு தரத்தில் உள்ளவர்களும் பல்வேறு கோணத்தில் சிந்திப்பவர்களும் நடுப்புள்ளியை நோக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கட்டுரைகள் வரையப்பட்டுள்ளதாக நான் கருதுகிறேன். தங்களின் கூர்மையான அறிவுப் பார்வைக்கு வேறு சில காட்சிகளையும் முரண்பாடுகளையும் இவை அளிக்கக் கூடும். ஆயினும் இளைஞர்கள், மாணவர்கள், உழவர்கள், தொழிலாளர்கள், குமுக ஒடுக்கு முறைக்குட் பட்டவர்கள், ஆகிய ஒவ்வொரு பிரிவினரும் இயல்பான முறையில் தங்களுடைய தாக்க நிலையிலிருந்து அதற்கான காரணத்தைக் கண்டறிந்து இதற்குத் தீர்வு காண வேண்டும்.

கருத்துகள் விரைந்து பரவுவதற்கு 'தமிழ் நிலம்' வெளிவருவதின் கால இடை வெளியையும், வடிவத்தையும் மாற்றுவதற்கு தாங்கள் எடுத்துள்ள முயற்சியில் நாங்களும் தங்களுக்குத் தோளோடு தோளாகப் பணியாற்றக் காத்திருக்கின்றோம். பல்வேறு நிலையிலுள்ள இளைஞர்களை இடைவிடாது சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

தங்களன்புள்ள, —க.கண்ணன், அறி.இ.
இணைச்செயலாளர், உ.த.மு.க.

தமிழன் நெஞ்சிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் தமிழை எடுத்து விடத் திட்டமிடப் பெறுகிறது! பிரபஞ்சன் கூறுகிறார்!

கேள்வி. அப்துல் ரகுமான் கவிதைப் புத்தகம் பல்கலைக் கழகத்தில் பாடத்திட்டத்தில் இருந்து எடுக்கப் பட்டதே, என்ன காரணம்?

விடை: தமிழ்நாட்டில் இருந்து தமிழை எடுத்து விடும் திட்டத்தின் முதல் படி இது. அடுத்த கட்டம், தமிழன் நெஞ்சிலிருந்து தமிழை எடுத்து விடவும் இது'சௌகர்யம்!' எதிர்காலத்தில் கவிதை எழுதுவது கூட குற்றம் என்று ஒரு சட்டம் வரும் எழுதுபவன் கை முடமாகும். படிப்பவன் கண்கள் குருடாகும். தமிழ் நாட்டில் எதுவும் நடக்கும்.

(பிரபஞ்சன் பதில்கள். 'போலீஸ்' 1-2-92)

இந்தியாவை ஆளும் பார்ப்பனர்கள்!

1. காஞ்சி சங்கராச்சாரியார்.
2. பூரிச்சங்கராச்சாரி, 3 ஸ்ரீவ ரெங்கம் ஜீயர்
4. ஆர்.வெங்கட்டராமய்யர்.
5. சங்கர்தயாள் சர்மா, 6. பி.வி.நரசிம்மராவ்
7. ஏ.பி.வாஜ்பேய், 8. முரளி மனோகர் ஜோஷி
9. எல்.கே.அத்வானி
10. சுப்பிரமணியசாமி
11. டி.என்.சேஷன் (தலைமைத் தேர்தல் அதிகாரி)
12. இராணுவத் தளபதி ரா்ம்தாஸ்
13. திட்டக் கமிட்டி தலைவர் பிரணாப் முகர்ஜி
14. ரிசர்வ் வங்கித் தலைவர் வெங்கட்ராமன
15. அட்டர்னி ஜெனரல் ஜி.இராமசாமி
16. ஜெ.ஜெயலலிதா

மற்றும், மற்றும்...!— அசுரன்.

—நன்றி. நாத்திகம், 1-3-92.

பிரபாகரனை யாரும் எளிதில் நெருங்க முடியாது!

முன்னாள் இந்திய அமைதிப்படையின் தளபதி
அர்கிந்த் சிங்.

இராசீவ், இலங்கைக்கு அனுப்பி வைத்த முதல் இந்திய அமைதிப் படையின் (I.P.K.F.) முதல் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் அர்கிந்த் சிங்,

அவர் 'வீக்லி' என்னும் ஓர் ஆங்கில இதழ்க்கு அளித்த நேருரையில் தமிழீழ விடுதலை மாவீரன் பிரபாகரனைப் பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது அனைவர் கவனத்திற்கும் உரியது.

"நான் இந்திய அரசிடம், இலங்கை அரசுடன் ஒத்துப் போக வேண்டாம் என அப்பொழுதே எச்சரித்துச் சொன்னேன். இலங்கை அரசு விடுதலைப் புலிகளோடு இணைந்து எங்களைப் பின்னால் தள்ளி விட்டார்கள்,

விடுதலைப் புலிகளுக்கு யார், எங்கே பயிற்சி அளித்தார்கள் என்பதில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. ஆனால் எனக்குத் தெரிந்தவரை மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்குப் பொருளியல் உதவிகள் செய்தார்.

விடுதலைப் புலிகள் தீவிரக் கொள்கையினர். நல்ல பயிற்சி பெற்றுள்ளார்கள். பல புதுமையான புதின (நவீன)க் கருவிகள் அவர்களிடத்தில் உள்ளன. கம்பியிலாத் தொடர்பு, எதிர்தாக்கும் தகரிகள், ஏ.கே.47, 5.56 துமுக்கிகள் (துப்பாக்கிகள்) போன்ற கருவிகளையும் வைத்துள்ளனர். அவர்களே கூட சில தொழில் நுட்பங்களை உருவாக்கியுள்ளனர்.

தனி ஈழம் என்ற கொள்கை நோக்கிலிருந்து அவர்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்கவில்லை. இந்தியக் கடற்படை எல்லா மூலைகளிலும் காவலம் (ரோந்து) வந்தாலும் கூட, அனைத்தையும் மீறி இரட்டை இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளில் போர்க்கருவிகளைக் கடத்தி வந்தனர்.

அவர்களுக்குக் குளிருக்குப் போர்வையோ, உணவோ எதுவும் தேவையில்லை. அவர்கள் தங்கள் போர்க்கருவிகளைக் கடலுக்குள் புதைத்து வைத்தனர். இருட்டில் கூட அவற்றைத் தேடி எடுத்து விடுவார்கள்.

நாங்கள் வான்குடைப் போராளிகளைப் பயன்படுத்தினோம். திருகூர்திகளில் (ஹெலிகாப்டர்களில்) இருந்து, வான்குடை மூலம் குதித்து எதிரிகளின் தங்கில் (முகாம்)களைக் கண்டு பிடிக்கவும், அவற்றை அழிக்கவும் செய்தார்கள். ஒரு முறை பிரபாகரன் தம் கூட்டாளிகளுக்கு ஓரிடத்திலிருந்து கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள அவர் தலைமையகத்தில் இருந்து பேசுகிறார் என்பதைக் கண்டு பிடித்து, எங்கள் படைஞர்களை அங்கு அனுப்பி வைக்க, அவர்கள் அங்குப் போய்ச் சேர்வதற்குள், அதை அறிந்து கொண்டு அவர் அங்கிருந்து வேறிடம் போய்ச் சேர்ந்து விட்டார். பின்னர் அங்குக் கிடைத்த சில கடிதங்கள் வழி, அவர் லிபியா, ஜோர்டான், கடாபி போன்ற நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது. அந்தக் கடிதங்களில் அவர் எல்லாரிடமும் பொருள் உதவி கேட்டு எழுதி இருந்தார்.

பிரபாகரனைப் பொறுத்தவரையில் அவர் தம் கொள்கை நோக்கிற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருக்கிறார். தமிழீழ இலக்கை அடைவதற்காக ஒரே மனத்துடன் அவர் உறுதியாகச் செயல்படுவது பலராலும் மதிக்கப் படுகிறது. அவர் தமது எதிரிகளை விட்டு வைப்பதில்லை.

விடுதலைப் புலிகள் உரிமைக்காக—விடுதலைக்காகப் போராடுகிறார்கள். எனவே ஈகம் செய்யும்போது எல்லாவற்றையும் செய்தவர்கள் விடுதலைப் புலிகளே என்று அனைவரும் கருத வேண்டும் என்று பிரபாகரன் நினைக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில் பிரபாகரன் உடன்பட்டொழுகும் (அனுசரணையாக நடந்து கொள்ளும்) தன்மையுள்ளவர். மகிழ்ச்சியாகவும் இருப்பார். அவர் தம்மைச் சுற்றிப் பாதுகாப்பு அகழியையே ஏற்படுத்தி உள்ளார். அவரது பாதுகாப்பு கடுமையானது. அடிக்கடி இடம் விட்டு இடம் மாறுவார். யாரும் எளிதாக அவரை நெருங்கி விட முடியாது.

ஒரு முறை எங்களது குடிப்பிரிவுப் (சிவில்) பெண் மருத்துவரை யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் கடத்திச் சென்று விட்டனர். அவர் மூன்று நாள்களாக இருப்பிடம் திரும்பவில்லை. அதன் பிறகே அவர் வந்து சேர்ந்தார். பிறகுதான் பிரபாகரன் மனைவிக்குப் பேறு (பிரசவம்) பார்ப்பதற்காக அவர் கடத்திச் செல்லப்பட்டுத் திருப்பிக் கொணர்ந்து விடப் பெற்றார் என்பது தெரிய வந்தது.

விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் உள்ள கட்டுப்பாடு எவராலும் உடைக்க முடியாதது. அந்த இயக்கத்தினர் மது வருந்தக் கட்டுப்பாடு நெறிக்கப்பட்டுள்ளது. அவ்வியக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் அவ்வியக்கக் கொள்கைக்கும் தங்கள் தலைவர் பிரபாகரனுக்கும் தங்களை ஈவு (அர்ப்பணம்) கொடுத்துக் கொண்டவர்கள். அவர்களின் பாதுகாப்பு இரும்பு அரண் போன்றது. O

'மானமிகு', மக்களிடம் வெளிப்படையாக இருத்தல் வேண்டும்; இல்லையேல், தொண்டர்களிடம் சரியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்!

--தொலைநோக்காடி.

'உண்மை'யில் 'மானமிகு'

திராவிடர் கழகச் சார்பான 'உண்மை' (மலர் 21, இதழ் 20-அக்டோபர் 15-31) இதழில் 'மானமிகு' வினு விடைப் பகுதியில் ஒரு வினுவிற்கு அளிக்கப்பட்டுள்ள விடை குறித்து நாம் இங்கே பார்ப்போம்.

'உண்மை' பேசும் 'மானமிகு', வினுவிற்கான விடையை 'நேரடியாக'க் கூருமல், 'திருக்குறளுக்குள்' ஒளிந்து கொள்கிருர். வினு தெளிவானது. விடை தந்திரமானது; ஏமாற்றும் உத்தி கொண்டது. வினு இதுதான்.

> "பெருஞ்சித்திரனுர் போன்றவர்கள் வலியுறுத்துகின்ற தனித் தமிழ் நாடு கோரிக்கை பற்றித் தங்கள் கருத்து என்ன?"

வினு—சொல்லும் தெளிவான செய்திகள்—

தனித் தமிழ் நாடு கோரிக்கையைப் பெருஞ்சித்திரனுர் மட்டுமின்றி அவர் போன்றவர் வலியுறுத்தி வருகின்றனர். எனவே, அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டு வருகின்ற கோரிக்கை 'தனித் தமிழ் நாடு' என்பது.

இதில் 'மானமிகு'வின் கருத்து, தனித் தமிழ் நாடு கேட்பது—சரியானது; இல்லை தவருனது; தேவையற்றது, என்றவாறு தெளிவு படுத்துவார் என்னும் எதிர்பார்க்கும் தொண்டரின் 'உணர்வு' வெளிப்பட்டுள்ளது. ஆனல், 'விடை'யாக 'மானமிகு' தந்திருப்பது, திருக்குறள்.

அத் திருக்குறள்:

> "பொருள் கருவி காலம் வினை இடனெடு ஐந்தும்
> இருள் தீர எண்ணிச் செயல்"

இக் குறளை விடையாகத் தருவதன் நோக்கம் என்ன? இக் குறள் வழியாகத் தம்மை ஒளித்துக் கொண்டு மானமிகு அவர்கள், நேரடியான விடை தராமல் நழுவிச் செல்கின்ருரே ஏன்? இந் நழுவல், தொண்டர்களை ஏமாற்றும் 'உத்தி'யாக அன்றோ உள்ளது!

'தமிழினம்', இன்று தெளிவான பாதை தேடி அலைகின்றது. அப் பாதையைக் காட்டுவதில் 'தலைமைகள்' தடுமாறுகின்றன. பாவலரேறு போன்றவர்கள், "சரியாகவோ," "தவருகவோ," ஒரு 'தெளிவான பாதை'யைக் காட்டி வருகின்ருர்கள். பெருஞ் சாய்காலும், பொருள், ஆள் கூட்டமும் உடையவர்கள், ஒரு 'சரியான' என்று முடிவு செய்த பாதையைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும். சரியும், தவறும், எதிர்வரும் வரலாற்றினல் தீர்மானிக்கப் படுவதொன்று. இது 'மானமிகு' அறியாத தன்றே!

விடையானது, 'தேவை' ஆனல், அதற்கான பொருள் இல்லை; காலம் கனியவில்லை; கருவி இல்லை, வினை வலிவில்லை; உரிய இடமிதுவன்று என்பதாக உள்ளது.

'தேவை' என்பதில் முடிவாகி விட்டபின் அதனை அடைவதற்கான, வழிமுறைகளைச் சொல்லித் தீரல் வேண்டும். இன்று மாநிலத் தன்னுட்சி, தன்னுறுதி (தன்னுரிமை), தனிநாடு என்று தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற 'இந்தியப் பகுதி'களிலும் 'கோரிக்கை' எழுந்திருப்பதைக் காண்கிருேம். இவற்றிற்கு'எதிராக' 'ஒருமைப்பாடு' என்ற 'வரட்டுக்குரல்' தொடர்ந்து கேட்பதையும் அறிவோம். இந் நிலைமையில் ஒரு தெளிவான வினுவிற்குத் 'தகுந்த' விடையளிக்க வேண்டிய 'மானமிகு' அவர்கள் நழுவலாக விடை கூறியிருப்பது ஏன்? இதனை 'ஏமாற்று' என்ருல், சினம் கொள்ளுதல் கூடாது. ஆறச் சிந்தித்து விடை கூறுதல் வேண்டும்.

அரசியல் களத்தில், 'பதவி நாற்காலி'க்குப் போகாமல் 'உண்மை' பேசும் ஆற்றலை இழந்து விட வேறு காரணம் இருத்தல் வேண்டும். தந்தை பெரியார் விட்டுச் சென்ற துணிவு, 'யானை வேட்டைக்குப் போகும்' வீரம், 'முயலை வீழ்த்தி விட்டதற்காகப் பெருமை பீற்ருத தன்னடக்கம் முதலிய பண்புகளைத் தொண்டர்கள் எதிர்பார்க்கிருர்கள், நம் 'மானமிகு' அவர்களிடம்!

'தமிழின முன்னேற்றம்' எந்தப் பாதையில் கிடைக்கும் என்பதை அறியத் தவங்கிடக்கும், 'உண்மை' உள்ளங்கள், அமைப்புகளைத் தெளிவான எழுத்தால், பேச்சால் வழி நடத்தினலன்றி, மக்கள் நலம் பெறப் போவதில்லை. பாதையைத் தேர்ந்தெடுத்துப் பின்பற்ற விரும்பும் மக்கள் அல்லது இயக்கங்கள்—(மக்களின் தேவையுணராத இயக்கங்கள் வெல்வதில்லை; வாழ்வதில்லை) புரிந்து கொள்ளும் வண்ணம் 'மானமிகு' 'உண்மை'யைப் பேசுவார்; அதனை 'உண்மை' வழியாகத் தருவார் என எதிர் பார்க்கிருேம். ○

Scanned with CamScanner

இதழ் எண்: 150-இன் தொடர்ச்சி: தொடர்: 2

இனம் மீண்டும் எழுகிறது!

வெங்காலூர்-- 'குணா'

வட தமிழ் மாவட்டங்களில் தொல் தமிழர்களாகிய பறையர் முதலானோருக்கு ஏற்பட்ட இத்தகைய நில இழப்பு இன்று தெற்கு வரையிலுள்ள பிற தமிழ்ச் சாதியினர் வரை அடியோடிக் கிடக்கிறது. சிறு உழவர்களாகவும், குறு உழவர்களாகவும் உழுதுண் போராக இருந்து கொண்டு வாழ்க்கையுடன் போராடி வருகின்ற வன்னியரில் பலர், இந்த ஓசையிலாத் தெலுங்கர் படையெடுப்பினால் நிலை குலைந்து வருகின்றனர். இவர்கள் தத்தம் நிலங்களை விட்டு வெளியேற்றப்படவோ, புறப்படுத்தப் படவோ (MARGINALISED) செய்யப்படுவது வேகப் பட்டுள்ளது. தெலுங்கர்களான நாயுடுமார்களும், இரெட்டிமார்களும் இந்தப் பகுதித் தமிழ் மக்களின் நிலபுலன்களை வேகமாகக் கைப்பற்றிக் கொண்டு வருகின்ற இயற்பாட்டை வன்னியச் சாதித் தலைமையினால் சரிவர விளங்கிக் கொள்ள முடியவில்லை. தங்கள் சாதிக்கெனத் தனியாகச் சலுகைகளும் இட ஒதுக்கீடும் தரப்பட்டால் தங்களின் குறைகள் எல்லாம் மாயமாய் மறைந்து விடுமென அது நம்பி வருகின்றது. ஓசையில்லா அத்தெலுங்கர் படையெடுப்பு பையப்பையக் கையகப்படுத்தி கொண்டு வருவதைத் தடுத்து நிறுத்துவதன் வாயிலா மட்டும் வன்னிய சாதி உழவர்கள் மேன்மேலும் ஓட்டாண்டிகளாகி வருவதைத் தடுத்து நிறுத்த முடியும் என்னும் தெளிவு அந்தத் தலைமைக்கு இல்லை. அதனால்தான் அவ்வப்போது தமிழரான பறையர் மீது வன்னியர்களைப் பாய விடும் அவநிலையைப் பார்க்கின்றோம். புத்தம் புதிதாய்த் தமிழகத்திற்கு ஊடுருவி வருகிற வந்தேறிகள் தமிழகத்தின் நிலம் போன்ற அசையாச் சொத்துக்களை வாங்குவதை காஃழ்மீரத்திலோ, மிசோராமிலோ செய்துள்ளதைப் போன்று சட்டப்படி தடுக்கப் போராட வேண்டும் என்பதே முதல் பாடம். அதற்கான, தமிழ்த்தேசிய ஓர்மையை வளர்ப்பதும் வாழப்படுத்துவதும் மட்டுமே வன்னியரின் சிக்கலுக்கான அடிப்படைத் தீர்வாகவும் இருக்க முடியும்.

புறத்தியாரின் இந்த நிலப்பறிப்புக்கு அடுத்த பக்கமாக இருப்பது தமிழகத்தின் தொழில்துறையில் அந்தப் புறத்தியார் கொண்டுள்ள உடும்புப் பிடியாகும். கொங்கு நாட்டில் (குறிப்பாக கோவை மாநகரில்) உள்ள தெலுங்கர்களுக்குச் சொந்தமான சிறிய, பெரிய தொழிலகங்களில் தமிழர்க்கு வேலை வாய்ப்புத் தரப்படுவதில்லை. தெலுங்கர்களுக்கு மட்டுமே அத்தொழிலகங்களில் வேலை தரப்பட வேண்டும் என்னும் எழுதப்படாத, சொல்லில்வராத ஒரு வழக்கமும் நெறியும் நடப்பில் இருந்து வருகின்றது. இதை ஒப்போலை கேட்டு அலைகின்ற முதலாளிய அரசியலார்களும் தமிழகத்தின் தலைவர்களாகத் தங்களைத் தாங்களே அமர்த்திக் கொண்டவர்களும் "முற்போக்கு"களும் "புரட்சி"களும் கண்டும் காணாமலும் கிடக்கின்ற ஏனோதானோத்தனம் இங்குக் கவனிக்கத் தக்கது.

திரையன் குதிரை:

ஒவ்வொரு கொள்கைக்கும் ஒரு தனி வரலாற்றுப் பார்வையும், நெறியும் உண்டு. ஓர் அரசியல் வெளிப்பாட்டிற்கும், அமைப்பிற்கும் ஆகிவருகின்ற பொய்யையோ மெய்யையோ அது போன்ற வரலாற்று விளக்கம் "இதுதான் நம்முடைய வரலாறு!" எனச் சொல்லக் கற்பிக்கின்றது. ஆரிய—திராவிடப் பூசல் என்னும் வரலாறும் அது போன்றதேயாகும். ஆரிய—திராவிட மோதல் என்னும் வரலாற்று விளக்கம்தான் தமிழகத்தின் அரசியலாக இன்று புரையோடிக் கிடக்கின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளுக்கு இடையில் விளங்கி வந்த ஒரு தேசியக் கூட்டணியைக் "காரவேலன்" என்னும் கலிங்க நாட்டு அரசன் உடைத்தெறிந்தானும். வேங்கடத்திற்கு அப்பால் ஒரு பெரிய காவலரணாக அப்போது இருந்து வந்த (புறநானூறு குறிப்பிடுகின்ற) முக்காவல் நாடு அப்போது வீழ்ந்துபட்டிருக்கலாம். தமிழ் கூறும் நல்லுலகின் அந்த எல்லையில் ஏற்பட்ட இவ்வுடைப்பின் ஊடே வடுகர்கள் பெருமளவில் உட்புகத் தலைப்பட்டனர். அந்த ஊடுருவலின் தொகை நிலையாக (தெலுங்குப் பகுதிகளிலிருந்து வந்த காடவர்கள் என்னும்) பல்லவர்களின் வந்தேறி ஆட்சி வந்தது. பார்ப்பனியம் அரசுக் கொள்கையாகவும், அரசுச் சட்டமாகவும் தமிழகத்தில் கொலுவேற முதலில் வழி செய்தவர்கள் இந்தப் பல்லவர்கள்தாம் என்பது ஒரு வரலாறு. ஒரு புறம் புத்த சமண சமயப் போர்வைகளில் வந்த வடக்கத்திய வணிகர் நலன்களும், மறுபுறத்தில் வந்தேறி வடுகர்களின் நலன்களும் கை கோத்து நின்றன. இவ் விரண்டு ஆரியக் கொள்கையையும் அந்த ஆரியக் கொள்கையைத் தழுவிய ஒரு பொய்ப் பண்பாட்டையும் ஒரு திரையன் (Trojan) குதிரைப் பாணியில் தமிழகத்திற்குள் கொண்டு வந்தனர். அந்த ஆரியக் கொள்கையின் இலக்கியம் பண்பாட்டுக் கருவியாக மாபாரதத்தையும் இராமாயணத்தையும்

Scanned with CamScanner

வடக்கிலிருந்து கொண்டுவந்து அரங்கேற்றியதும் இந்தத் தெலுங்கு வந்தேறிகள்தாமோ எனக் கேட்கும் அளவுக்கு வடுகர்களின் ஆரியச் சார்பு இருந்து வந்துள்ளது. பார்ப்பனியமும், ஆரியக் கொடு நெறியமும் (ஃபாசிசமும்) நாயக்கர் ஆட்சிக் காலத்தில் போட்ட கொட்டத்திற்கு ஈடாக வேறொரு கால கட்டம் உண்டோ?

இதனால்தான் கங்கைக்கரை வடக்கத்தியர் தாம் ஆரியக் கொள்கையைக் கொண்டு வந்து தமிழகத்திற்குள் நேரடியாகப் புகுத்தினர் எனச் சொல்வதை விடப் பெரும்பாலும் வடுகரின் ஊடுருவலின் வழியாகத்தான் அது தமிழகத்திற்குள் ஊடுருவியது என்றே சொல்ல வேண்டும் எனச் சொல்லத்துணிகின்றோம். விசய நகர ஆட்சியின் வருகைக்குப் பின்னர் வந்த பாளையக்காரர்களின் கொள்கைகள் அரசியல் குழப்பத்தைத் தோற்றுவித்தன. இதனால் தமிழக வாழ்வியலில் பொதுஅமைதி குலைந்து கிடந்தது. அந்நாளில் ஆங்கிலேயர்கள் தமிழகத்தின் உள்நாட்டுப் போர்களில் தலையிடலானர். ஆரியக் கொள்கையும் பார்ப்பனிய மேலாண்மையும் அப்போது மங்கத் தொடங்கின. பின்னர் அதே ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் பிடித்துக் கொண்டனர். பிடித்த துணைக் கண்டத்தை ஒட்டச் சுரண்டுவதற்கு அந்தப் பார்ப்பனியத்தை உயிர்ப்பித்து மேனிமினுக்க வைத்தனர். இல்லாத ஓர் "இந்து"க் கொள்கையையும் கற்பித்தனர். அதன் வழியாகத் தாங்கள் உருவாக்கிய "இந்துத்தானை" ஒட்டுமொத்தமாக வைத்து ஆளப் பார்த்தனர். மாக்சுமுல்லர், மானியர் வில்லியம்சு போன்ற அய்ரோப்பியர்கள் உருவாக்கிய ஆரியக் கொள்கையையும் இந்துக் கொள்கையையும் கலந்து அவியலாக்கி ஒரு புதிய வரலாற்று விளக்கத்தை முன் வைத்தனர். 1878-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தோற்று விக்கப்பட்ட இறைநெறிக் கழகமும் (THEOSOPHICAL SOCIETY) அய்ரோப்பியர்கள் கற்பித்துத் தந்த ஆரியக் கொள்கையின் தாக்கத்தால் வந்த பிரமக் கழகமும் (BRAMA SAMAJ) ஆரியக் கழகமும் (ARYA SAMAJ) தமிழகத்திற்குள் வந்து ஆரியக் கூத்தாடின. இறைநெறிக் கழகத்திலும் தெலுங்குப் பார்ப்பனர்கள், கோமுட்டிச் செட்டிகள்; நாயுடுகள், இரெட்டிகள் போன்ற தெலுங்கர்கள் பெருமளவில் ஈடுபாடு காட்டி வந்ததையும் இங்குச் சுட்டிக் காட்டுதல் பொருத்தம். *பார்ப்பனிய மீட்சியின் நரம்பு மண்டலமாக விளங்கி வருகிற காஞ்சி காமகோடி மடத்தின் தலைவர்களாகத் தெலுங்குப் பார்ப்பனர்கள் மட்டுமே வரமுடியும். தமிழ்நாட்டில் பூசாரித் தொழில் செய்து வருகின்ற பார்ப்பனர்களில் மிகப் பெரும்பாலோர் தெலுங்குப் பார்ப்பனர்கள்தாம்.* இந்த மெய்ம்மைகளை வைத்துத் தமிழகத்தில் ஆரியப் பார்ப்பனியக் கொள்கையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுப் பார்ப்பனிய நலன்களைப் பேண வல்ல தலைமையைத் தந்து வருவதும் தெலுங்கர்கள் நலம் என்பது புலப்படும்.

சலுகை அரசியல் ஒரு செப்படி வேடிக்கை:

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் மலைவாழ் மக்களுக்கும், கல்விச் சலுகைகளையும், இட ஒதுக்கீட்டையும் கேட்டுப் பெறுவதே இந்தப் பார்ப்பனரல்லா இயக்கம் ஒரு குமுகிய மாற்றத்திற்கான தீர்வாகச் சொல்லி வந்துள்ளது. இது போன்ற சலுகைகளாலும், இட ஒதுக்கீடுகளாலும் தமிழர்களில் எத்தனை விழுக்காட்டினர் உண்மையாகப் பயனடைந்துள்ளனர் என்பதே கேள்வி. மிகவும் பிற்படுத்தப் பட்டோர் எனபவரின் பட்டியலை எடுத்துப் பாருங்கள்! பட்ராசுகள், போயர்கள், ஒட்டர்கள், தாசரிகள், தொம்மராக்கள் ஃசோசிகள், மோண்ட் கொல்லர், மங்கலாக்கள், மகேந்திராக்கள் மேதராக்கள், தெலுங்குப்பட்டி செட்டிகள், ஆகாசாக்கள், இராச கம்பளங்கள், கொல்லவார், சில்லவார், தொழுவ நாயக்கர் போன்ற தெலுங்குச் சாதியினரும், பெசுத்தா சிவியர் ஃசங்கம் போன்ற கன்னடச்சாதியினரும், பரவர், வேளக்கட்டள நாயர் போன்ற மலையாள சாதியினரும் தாமே தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து சலுகைகளையும் இட ஒதுக்கீட்டையும் பெற்று வருகின்ற மிகவும் பிற்பட்ட "சாதியினரில்" பாதிக்கு மேற்பட்டோர்! அதே போல் "சீர்மரபினர்" பட்டியலைப் பாருங்கள்! போயர், தொங்க போயர், கொரவதொட்ட போயர், தொங்க தாசரி போன்ற தெலுங்கர்களும் பிறரும்தாமே உண்மையில் அவற்றால் பயனைத் துய்த்து வருபவர்கள்? தமிழனுக்கே நிலம் இல்லாத போது இலம்பாடிகள், கொரச்சர், நரிக்குறவர் போன்ற நாடோடிச் சாதியினருக்கு நிலத்தைப் பட்டாச் செய்து கொடுத்துத் தமிழகத்தில் குடியேற்றுவதாம்! சலுகைகளையும் இட ஒதுக்கீட்டையும்வேறு அவர்களுக்குச் செய்து கொடுத்துத் தமிழினம் அவர்களைப்பேண வேண்டுமாம்! இந்தச் சலுகை— இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தன்னுடைய உயிர் முழக்கமாகக் கொண்ட திராவிட இயக்கம், இவ்வாறு தமிழரல்லாதோரின் (குறிப்பாகப் பார்ப்பனரல்லாத் தெலுங்கரின்) நலன்களைத்தாம் பேணி வந்துள்ளதையும் பேணி வருவதையும் விரித்துரைக்க இங்கு இடமில்லை.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல் சட்டங்கள் புனித வேதப் பொத்தகங்களல்ல! எல்லைக் கோடுகளும் சாகா வரம் பெற்றவையல்ல!

ஒன்றிய நாடுகள் (ஐ.நா.) அவையின் மாடிப் படிகளில் இப்போது கேட்கப்படுகிற கேள்வி "இந்தக் கிழமை யாராவது ஒன்றிய நாடுகள் அவையில் சேருவதற்கு வேண்டுகை விடுத்தார்களா?" என்பதுதான்,

இந்தக் கேள்விக் கணைக்கு அஞ்சிப் பாதுகாப்பு அவை உறுப்பினர்கள் ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்—அவ்வளவு தூரம் ஏன்—ஓர் ஐந்து மாதங்களுக்கு முன்—இப்படியான கேள்வி பெரிய பகடியாக(கேலியாக)இருந்திருக்கும்.

ஒன்றிய நாடுகள் அவையில் சேர்வதற்கான நாடுகளின் வேண்டுகைகள் அத்திமரம் பூத்த மாதிரி இங்கொன்றும், அங்கொன்றுமாகத்தாம் செய்யப்பட்டன.

கடந்த நாற்பது ஆண்டுக்காலமாக ஒன்றிய நாடுகள் அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, இருந்த மாதிரியே, அதிகளவு மாற்றம் இல்லாமல் இருந்து வந்திருக்கின்றது.

புதிதாக உரிமை(சுதந்திரம்)பெற்ற சில ஆப்பிரிக்க நாடுகள் மட்டும் ஒன்றிய நாடுகள் அவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ஆனால் இன்றோ நிலைமை முற்றிலும் வேறு. ஒன்றிய நாடுகள் அவை விரைவு விரைவாகப் புதிய உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் நமீபிய(Namibia) இலத்வியா(Latvia)இலித்துவேனியா (Lithuania) எஸ்தோனியா(Esthonia)நாடுகள் ஒன்றிய நாடுகள் அவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டில் இன்னும் ஒன்பது நாடுகளின் வேண்டுகைகள் பாதுகாப்பு அவையால் ஏற்பளிக்கப் பட்டுள்ளன. அவையாவன:

மால்டோவா (Moldova), காஜக்ஸ்தான் (Kazakhstan), கிர்க்கிஸ்தான (Kyrgyzstan), உஸ்பெக்கிஸ்தான், (uzbekistan), துர்க்மேனிஸ்தான் (Turkmenistan), அஜர்பைஜான் (azerbaijan),ஆர்மேனியா (Armenia), தாஜிக்கிஸ்தான் (Tajikistan), சான்மேரீனோ (San marino)

முதல் எட்டு நாடுகளும் சோவியத்து ஒன்றியத்தின் சாம்பல் மேட்டில் முளைத்தவை என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொள்வீர்கள். இந்த ஒன்பதாவது நாடு பற்றி யாராவது இதற்கு முன்பு கேள்விப்பட்டதுண்டா? அல்லது உலகப்படத்தில் பார்த்த நினைவாகிலும் இருக்கிறதா?

நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது விழுக்காடு சான் மேரீனோ (San Marino) நாடு பற்றி நீங்கள் கேள்விப்பட்டு இருக்கவும் மாட்டீர்கள்; உலகப் படத்தில் பார்த்தும் இருக்க மாட்டீர்கள்.

உண்மையில் சான் மேரீனோ ஒரு நாடன்று. சிங்கப்பூரைப் போல ஒரு பட்டினம்(City state)

சான் மேரீனோ (San Marino,) பாப்பரசரின் வாட்டிகன் (Vatican) மாதிரி இத்தாலியில் உள்ள ஒரு சிறிய நாடு. சுண்டைக்காய் பருமன் அளவுகூட இல்லை. கடுகு நாடு—இல்லை பட்டினம்.

சரி நாடுதான் கடுகு. தொகை எப்படி?

அதன் மக்கள் தொகை வெறும் இருபதாயிரம்! சொன்னால் நம்ப மாட்டீர்கள்: ஆனால் உண்மை.

இந்த நாட்டுக்குத்தான் ஒன்றிய நாடுகள் அவை சிவப்புக் கம்பளம் விரித்து வருக வருகவென வாழ்த்துகள் முழங்க வரவேற்றிருக்கிறது.

குரோசியாவும், ஸ்லோவேனியாவும் ஒன்றிய நாடுகள் அவையில் விரைவில் இடம் பிடித்துக் கொள்ளப் போகின்றன.

இன்று மொத்தம் 175 நாடுகள் ஒன்றிய நாடுகள் அவையை அணி செய்கின்றன.

அடிமை விலங்குகள் தங்கத்தால் செய்யப்பட்டிருப்பினும் உடைத்துக் கொண்டு உலகில் உரிமை நாடுகளாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உலா வரும் இந்தப் புத்தம் புது நாடுகளை, "சோறும் கறியும் பெரிதல்ல, உரிமையும் (சுதந்திரமும்) விடுதலையும் பெரிது" என்று முழக்கம் இடும் இந்த நாடுகளையும் மக்களையும் தமிழ் ஈழமும் தமிழினமும் தலை தாழ்த்தி வரவேற்கின்றன.

ஒரு நாட்டின் அரசியல் சட்டம் புனிதமான வேதப் புத்தகமன்று!

ஒரு நாட்டின் எல்லைக் கோடுகள் சாகாவரம் பெற்றவையுமல்ல!

அரசியல் சட்டங்கள் கிழித்து எறியப்படலாம். எல்லைக் கோடுகள் மாறி வரையப்படலாம்

இந்த அரசியல் வரலாற்று உண்மையைத் தான் உரிமை பெற்ற இந்த நாடுகள் நலமான பூபாளமாக இசைத்துக் கொண்டிருக்கின்றன.

இதே உண்மையைத்தான் பாரதியார் இப்படிப் பாடியிருக்கிறார்.

Scanned with CamScanner

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ' என்று. இந்த நாடுகள் மக்களது தன்னுறுதி உரிமையின் அடிப்படையிலேயே தங்களை உரிமை நாடுகளாக வெளிப்படுத்தியிருக்கின்றன. அதை உலகம் ஏற்பிசைவு தந்திருப்பது உலக வரலாற்றில்—உலக சட்ட வாக்கத்தில்—ஒரு புதிய திருப்பு முனை. அரசியல் சிந்தனையில் ஒரு திருப்பம்; எண்ணத்தில் ஒரு மறுமலர்ச்சி.

தன்னுறுதி உரிமையே மக்கள் தங்களது அரசியல் பெருமை (Political Status), பொருளியல் மேம்பாடு, குமுக மற்றும் பண்பாட்டு மேம்பாடுகளைத் தன்னுரிமையுடன் உறுதிப்படுக்கவும் முன் எடுத்துச் செல்லவும் அடித்தளமாக இருக்கின்றது. இதுவே மாந்த உரிமைகளுக்கும் மூலக்கல்லாக அமைந்திருக்கிறது.

தன்னுறுதி உரிமையே முதல் உரிமையாக, இரண்டு அனைத்துலக மாந்த உரிமை உடன்படிக்கைகளில்(Treaties)வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

ஒன்று அனைத்து நாட்டுக் குடிநிலை அரசியல் உரிமைகள் உடன்பாடு. (International covenant on civil and political rights)

மற்றது அனைத்து நாட்டுப் பொருளியல் குமுகியல், பண்பாட்டு உரிமைகள் உடன்பாடு. (International govenant on economic,social, and cultural rights).

அரசியல் ஆய்வர் கார் (Carr) என்பவர் இப்படி எழுதுகிறார்—

"Self determination might indeed be regarded as implicit in the idea of democracy; for if every man's right is recognised to be consulted about the affairs of the political unit to which he belongs, he may be assumed to have an equal right to be consulted about the form and extent of the unit".

'தன்னுறுதி(சுயநிர்ணய)உரிமை மக்களாட்சி பற்றிய கருத்தில் தொக்கி நிற்கிறது என்றே கருதப்பட வேண்டும். ஏனெனில் அரசு ஆட்சியோடு தொடர்பான செயல்களில் தன்னோடு கலந்து கருத்தாய்வு செய்தல் வேண்டும் என்ற உரிமை ஒரு மாந்தனுக்கு உண்டு என்பதை ஏற்றுக் கொண்டால், அந்த அரசு ஆட்சி எப்படி அமைய வேண்டும், என்ன வடிவம் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் தன்னோடு கலந்து கருத்தாய வேண்டும் என்று ஒரு மாந்தன் கருதுவதற்கு அதே அளவு உரிமை உண்டு என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்'.

இன்னும் சொல்லப் போனால் தன்னுறுதி உரிமையும், குடிநாயகமும் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாகும்.

ஒரு காலத்தில் தன்னுறுதி உரிமை என்பது பிற ஆட்சியர் அல்லது குடியேற்ற நாடுகளது அதிகாரப் பிடிக்குள் சிக்குண்ட மக்களுக்கு மட்டுமே உண்டென்று கூறப்பட்டது. தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமை, ஆட்சி உரிமை அடைந்த நாட்டுக்குள் வாழும் மக்களுக்கு இல்லையென்று சொல்லப்பட்டது.

ஆனால் இன்று இந்தக் கருத்து அனைத்து நாட்டு அரசியல் அரங்கில் தலைகீழாக மாற்றம் அடைந்து விட்டது கவனிக்கத் தக்கது.

ஒரு பிறர் ஆட்சி அல்லது அனைத்ததிகார நாட்டிலிருந்து விடுபட்ட மக்களில் ஒரு சாரார் மீண்டும் ஒரு தன் தேசிய(சுதேசிய)அல்லது புதிய குடியேற்ற ஆட்சிக்கு உட்படும் பொழுது அந்த மக்களுக்கு மீண்டும் தன்னுறுதி உரிமை உண்டென்பதைப் பழைய சோவியத்து ஒன்றியத்திலிருந்து விடுபட்ட 14 நாடுகளையும் ஒன்றிய நாடுகள்! அவை ஏற்றுக் கொண்டதன் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்ததும்,பின்பு பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து வங்காளதேசமாக உருவானதுமான எடுத்துக்காட்டுகள் இருந்தாலும், இப்பொழுதுதான் எல்லா மக்களுக்கும் தன்னுறுதி உரிமையின் அடிப்படையில் தங்களது அரசியல், பொருளியல் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் உரிமை உலக நாடுகளினால் ஏற்கப்பட்டு வருகிறது. பழைய யூகோசிலாவிய நாட்டின் குடியரசுகளான குரோசியாவும், ஸ்லோவேனியாவும் தன்னுரிமையைக் கொள்கை வெளிப்பாடு செய்த பொழுது யூகோசிலாவிய நடுவண் அரசு அவற்றின் மீது போர் தொடுத்தது. முகாமையாக குரோசியா குடியரசு பாரியத் தாக்குதலுக்கு ஆளானது.

தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகள் யூகோசிலாவியாவின் இறைமையையும் எல்லைக் கோடுகளையும் பாதுகாக்கப் போவதாக அறிவித்தது.

குரோசிய, ஸ்லோவேனியா குடியரசுகளை ஏற்பது மேலும் பல நாடுகள் தங்கள் உரிமையை அறிவிப்புச் செய்ய வழி வகுக்கும் என அஞ்சப்பட்டது. ஆனால் செர்மனி மற்ற ஐரோப்பிய நாடுகளை முந்திக் கொண்டு, இந்தக் குடியரசுகளின் உரிமை அறிவிப்பை ஏற்பிசைவு செய்தது.

செர்மனியைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் தங்கள் ஏற்பிசைவை அறிவித்தன.

இன்று குரோசியாவில் உ.ஒ. அவையின் அமைதிப்படை நிலை கொண்டுள்ளது.

இத்தியோப்பியாவில் இருந்து பிரிந்து போன எருத்திரியாவில் ஒரு பொது மக்கள் ஒப்பெடுப்பு

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

ஓ! தானுவே! ஓங்கி ஒலிப்போம், உன் உயர் புகழையே!

—[redacted]—

அந்த இரவில் இந்திய எதிர்காலமே
இருண்டு விட்டதென நாளிதழ்களும்
வானொலி, தொலைக்காட்சியும் ஒப்பாரி வைத்தன!
என் உள்ளமும் ஓங்கி ஒலித்தது,
தோழியே, உனக்கு
வீர வணக்கம் செலுத்தித்தான்!

நீ ஈழத்துப் பெண்ணாம்;
எங்கள் எதிரிகள் சொல்கிறார்கள்!
ஈழம், பஞ்சாப், காசுமீர்,
தமிழக மக்களின்
ஒட்டு மொத்த உணர்வுகளின்
உருவம் நீ!

உணராதவர்கள் சொல்கிறார்கள்,
நீ ஈழத்துப் பெண்ணாம்!
நீ இரண்டகி(துரோகி) என்று கூடச்
சொல்கிறார்கள்;
ஒப்பந்தத்தை நம்பி
ஆயுதம் ஒப்படைத்த போராளிகளை
வேட்டையாடிய இரண்டகர்கள்(துரோகிகள்)
சொன்னார்கள்—நீ,
இரண்டகி(துரோகி) என்று!

ஆயிரம் முறை முகங்களைத்
தொலைக்காட்சியில் பதித்துக் கொண்ட
அவர்களுக்கு ஈகம்(தியாகம்) புரியாது;
பெயரைக் கூட பதிக்க விரும்பாத
உன் ஈகம் (தியாகம்) தெரியாது!
அவர்களுக்குத் தெரிந்த ஒன்று!
இரண்டகம் (துரோகம்) மட்டுமே,

உன்னைக்—கோழை என்று கூடச்
சொன்னார்கள்.
தேர்தல் கருத்துப் பரப்பிற்குக்கூட வராமல்
அஞ்சிக் கொண்டு, உன்னைக்
கோழை என்றுகூடச் சொன்னார்கள்!

தலைவியின் காலில் விழுவதில்
வென்றதால் மாவீரன்!
தலைவியின் பின்னால்
கைகட்டி நின்றால் தளபதி!
இந்த மாவீரன்களுக்கும்
தளபதிகளுக்கும் நீ கோழையாம்!

குண்டு துளைக்காத மேடை;
பூனைகளின் வளையங்களில் துப்பாக்கிகளின்
வகை காட்டும் அணிவகுப்பு;
இத்தனைக்கும் நடுவே
சாவு அச்சத்தோடு
இறுதிவரை உலா வருவோர் வீரராம்!
இறப்பை ஏற்று இறுதி நொடி வரை
சிரித்த முகத்துடன் சாவுக்கு
மாலையிடக் காத்திருந்த நீ
கோழையாம்;

உன்னைக் கொலைகாரி
வஞ்சகக்(சதி) காரி என்றார்கள்!
ஒப்பந்தம் போட்டுப் பின்
ஒழித்துக் கட்டுபவர்க்கும்—
அமைதி என்று புகுந்து,
அழித்து ஒழித்தவர்க்கும்—
கூட்டு வணிகம் என்று
கொள்ளை அடித்தவர்க்கும்—
சாவு தண்டனை வழங்கும்
மக்கள் மன்றத் தலைவி நீ;

ஒடுக்கப்பட்ட இன மக்களின்
உரிமை முழக்கமே!
அடிவருடிகளும் எடுபிடிகளும்
அவர்களின் தலைவனை ஏற்றிப் போற்றட்டும்;
உழைக்கும் மக்களின் விடுதலைக் குரலே
ஓங்கி ஒலிப்போம், உன் உயர் புகழை!

நன்றி! 'தாயகம்' இதழெண்: 10

தொடர்: 2.

உ.த.மு.க. பார்வையில் பாவலரேறு!

—பறம்பை அறிவன்,—

"தமிழினத்தைக் கட்டிக் காக்கவும் மேம்படுத்தவும்" பாவலரேறு அவர்கள் "ஓரியக்கம் தேவை" என்ற அமைந்த ஆய்வின் அடிப்படையில் உ.த.மு.க. வை உருவாக்கித் தந்தார்கள்.

"உ.த.மு.க. — உங்கள் இயக்கம்!
உங்களுக்கில்லை இனி வேறு மயக்கம்!
இணைத்துக் கொள்ளுங்கள், உங்களை!
ஏன் தயக்கம்?
எழுவீர் தமிழரே! இதுதான் நன்மை
பயக்கும்!"

என்று அறைகூவியழைத்த அரிமாப் பாவலரின் முழக்கத்தின் எதிரொலியாக வந்த 'பழஞ் செய்தி' களை எண்ணிப் பார்க்கிறேன். அவற்றின் ஆர்வ ஊற்று அடைபட்டுப் போகுமோ?

'என் வாழ் நாள் கனவு உ.த.மு.க' என்றார் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார். 'நல்லபணி' என நயந்தார் கி.ஆ.பெ. 'ஒன்று கூடி உழைக்கச் செய்யும் உ.த.மு.க.' என நம்பிக்கை கொண்டார் கீ. இராமலிங்கனார். 'தமிழினக் காப்பு முயற்சி' எனக் கைதட்டி வரவேற்றார் வே. ஆனைமுத்து.

'நம் பணி மிகவும் முடுக்கமாக இருத்தல் வேண்டும்' என நாவை சிவம் விரைவுப்படுத்தினார். இவர்களன்றி அறிஞரும் ஆர்வலரும், அன்பரும் பலரும் போற்றி வரவேற்ற

(10-ஆம் பக்கம் தொடர்ச்சி)

(கருத்துத் தேர்வு) நடத்த ஒழுங்குகள் நடக்கின்றன. மக்களின் தீர்ப்பு உரிமை எரித்திரியாவிற்கு ஆதரவாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. விரைவில் எரித்திரியர் உ.ஒ. அவையில் ஓர் உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளப்படும் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்.

இவையாவும் நாடுகளின் அரசியல் சட்டங்களும், நாடுகளின் எல்லைக் கோடுகளும் அழித்து எழுத முடியாத வேதங்கள் என்றோ, அவை சாகா வரம் பெற்றவை என்றோ இனி யாரும் கருத முடியாது என்னும் உண்மையை பறைசாற்றுகின்றது.

தமிழீழமும், தமிழ் இனமும் கடந்த நாற்பது ஆண்டுகளாக ஒரு கொடுமையான சிங்கள வல்லதிகாரத்தின் கருவி அடக்கு முறைக்கும் முற்றதிகாரத்துக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறது.

உரிமையாட்சிக்குக் கொடுக்க வேண்டிய விலையை, குரோசியாவை விட நாங்கள் கூடுதலாகவே கொடுத்து விட்டோம்.

தமிழ் ஈழத்தின் தன்னுறுதி (சுயநிர்ணய) உரிமையை அனைத்துலக நாடுகள் இன்னும் அதிகக்காலம் தள்ளிப்போட முடியாத ஒரு கட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டு இருக்கிறோம்.

ஒன்றிய நாடுகள் அவையில் "இதோ இந்தக் கிழமை தமிழீழத்தின் உறுப்பாண்மை கோரும் வேண்டுகை கிடைத்திருக்கிறது", என்ற செய்தி காற்றில் தவழும் நாள் அதிக தூரத்தில் இல்லை! கிழக்கு வானம் வெளுக்கிறது! தமிழீழ விடியலுக்கான பூபாளம் கேட்கிறது! O

நக்கீரன் —நன்றி — உலகத் தமிழர் —15-3 92

(முன்பக்கத் தொடர்ச்சி)

உ.த.மு.க.வை வளர்த்தெடுக்க வாருங்கள் என அழைக்கின்றேன்.

பாவலரேறு அவர்கள் உ.த.மு.க. கொள்கை பற்றியும், அதன் எழுச்சி குறித்தும் பாடியுள்ள பாக்களும், எழுதியவுரைகளும் மீளவும் இளைஞர் இளைஞைகளிடம் பரப்பப் பெறுதல் வேண்டும். இதனை உரிய ஒப்புதல் பெற்றுச் சிறு சிறு துண்டறிவிப்புகளாக அச்சிட்டுப் பரப்பிட உ.த.மு.க. வினர் முன் வருதல் வேண்டும்!

பாவலரேறு ஒரு பல்கலைக் கழகமாக விளங்குகிறார்; அதே வேளை அவர் எழுத்தாளர், பேச்சாளர், படைப்பறிஞர், அச்சுக் கோப்பாளர், பொறியாளர், கலைஞர், ஓவியர், மெய்ப்புத் திருத்துபவர் என எல்லாவற்றையும் தோள்மேல் போட்டுக் கொண்டு செயல்படுகின்றார். அவர் வழி நின்று, நாமும், செயல்படல் வேண்டும். அதற்கு ஒரு பாதையாக-செயலாக-வழியாக உ.த.மு.க. வினை எண்ணி இணைந்து வந்து கூடுக. O

TN/MS(C) 657

நூல்-அஞ்சல்

பெறுநர்

சிந்தனைக்கு-71

பண ஆசை, விளம்பர வேட்கை, மக்கள் மேல் அன்பில்லாமை, பொய் கூறுதல், ஒழுக்கமின்மை, திருட்டுணர்வு முதலிய தன்மையுள்ளவர்கள் அரசியலுக்கு வராமல் செய்வதே குடியரசின் முதல் பயனாக இருத்தல் வேண்டும்.

(2-ஆம்பக்கத் தொடர்ச்சி)

இந்துமதந்தான் பார்ப்பனியத்தின் ஆணி வேராகும். சாதிகள் பக்க வேர்கள்தாம்! எனவே தான் பார்ப்பனர்கள் இந்து மதத்தைப் பரப்புவதிலும், ஏழை, எளிய, கல்லாத, கரவு, வஞ்சனைகளில்லாத கீழ்த்தட்டுப் பேதை மக்களிடம் அதை வேரூன்றச் செய்வதிலும் இத்தனை ஆர்வமும், சூழ்ச்சியும், அகம்பாவமும், கொள்கின்றனர். ஒரு புறம் அறிவியலை வளர்க்கப் பார்ப்பான் ஏதோ இவனுக்கு மட்டிலுந்தான் அக்கறை இருப்பது போல் தம்பட்டம் அடிக்கிறான். மறுபுறம் ஆரியத்தை மத ஆணி அறைந்து யாராலும் அசைக்க முடியாதபடி வலுப்படுத்துகின்றான்.

மக்கள் திரண்டெழுந்து இக்கொடுமைகளை எதிர்க்காவிடில், எதிர்காலத்தில் எந்தத் துறையிலும் பார்ப்பனியக் கருத்துகள் தவிர, வேறெதற்கும் இடமிருக்காது என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும்! O

தமிழ்நிலம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்,

அச்சிடுவோர், தென்மொழி அச்சகம்.

5, அருணாசலத் தெரு, சென்னை-5.

தொலைபேசி எண் : 847829.

Scanned with CamScanner